# இஸ்லாத்தில் உறுப்பு இடமாற்றம்

## *உறுப்பு இடமாற்றம் பற்றிய சட்டமும் சிங்கையில் அதன் பயன்பாடும்*

قُلْ لِمَنْ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۖ قُلْ لِلَّهِ ۚ كَتَبَ عَلَىٰ نَفْسِهِ الرَّحْمَةَ

*கூறுக : “ யாருக்கு இவ்வுலகம் மற்றும் சொர்க்கத்திலுள்ள அனைத்தும் சொந்தம் ? ” கூறுக : அல்லாஹ்விற்கே. அவன் கருணையைத் தனக்கென பொறித்துள்ளான்.”*

**( அல் அனா’ம்: 12 )**

சிங்கை இஸ்லாமிய சமய மன்றம்

**2007**

الحمد لله رب العالمين والصلاة والسلام على أشرف الأنبياء والمرسلين

سيدنا محمد وعلى آله وصحبه أجمعين

எல்லா புகழும் இறைவனுக்கே, அனைத்து உலகையும் சீராட்டி ரட்சிப்பவன். சாந்தியும் அருளும் அவனது ஆருயிர் நபி முகம்மது மீதும், அவரது குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் உண்டாகுக.

சிறுநீரம் மற்றும் மற்ற உறுப்புகளின் நோய்கள் தொடர்பான பிரச்னை மிகவும் கடுமையானது, ஏனெனில், இது மனித உயிர்களைக் காப்பாற்றுவதை உள்ளடக்கியது. ஆகவே, உறுப்பு இடமாற்றம் பற்றி இஸ்லாமியச் சட்ட வல்லுநர்கள் ஆழமாக கலந்துரையாடியுள்ளனர். சிங்கையில், பொது மக்களுக்கு இதையொட்டி அறிவு புகட்டியும், உறுப்பு தானங்கள் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதின் தேவையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் மிகுந்த முயற்சியெடுத்துள்ளன. புதிய உறுப்புகளைப் பெறுவதே நோயாளிகளுக்குக் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆறுதலாகும்.

இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பினும், நோயாளிகள் படும் அவதி நிலைத்து வருகிறது. சிங்கையில் இஸ்லாமிய நன்கொடையாளர்கள் மிகுந்த குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். ஆதலால் புதிய உறுப்பினைப் பெற்று குணமடைந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் வாய்ப்பு கணிசமாகக் குறைந்துவிடுகிறது.

முஸ்லிம்கள் உறுப்பு தானம் வழங்குவதற்குத் தடையாக விளங்கும் மிக முக்கியமான காரணங்களில் ஒன்று யாதெனில், பலரிடம், இதைப்பற்றிய இஸ்லாமிய சட்டம் மற்றும் இஸ்லாமிய கண்ணோட்டம் யாது என்பதிலுள்ள குழப்பமும் உறுதியற்ற தன்மையுமே ஆகும். இந்தச் சிறு புத்தகம் இத்தகைய வினாக்களையும் கவலைகளையும் தீர்த்திட, எளிமையாக படித்து புரிந்துகொள்ளும் விதத்தில், தொடர் கேள்வி பதில் மூலமாக உறுப்பு தானம் பற்றிய இஸ்லாமியப் பார்வையை மிக விரிவாக விளக்குகிறது.

# முன்னுரை

உறுப்பு செயலிழத்தல் என்பது குணப்படுத்த முடியாதது. மேலும், ஓர் உறுப்பு பாதிப்புற்றால் எதனைச் செய்தும் இச்செயல்முறையை தலைகீழாக மாற்றிவிட இயலாது. சிறுநீரகங்கள், இருதயம் கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றன. காரணம், இவை செயலிழந்தால் மரணம்
ஏற்படலாம்.

சிறுநீரகம் செயலிழந்த ஒரு நோயாளி தற்காலிகமாகச் சுத்திகரிப்பு மூலமாக கவனிக்கப்படலாம். சுத்திகரிப்பு என்பது நோயாளியின் ரத்தத்தில் உள்ள அசுத்தங்களை ஒரு சிறப்பு வடிகட்டி மற்றும் செயற்கை சிறுநீராக இயந்திரம் மூலமாக நீக்குவதாகும்.

இருப்பினும், சுத்திகரிப்பு முறையானது வெறும் தற்காலிக முயற்சியே. இது உறுதியாகக் குணப்படுத்திவிடாது. நீண்ட காலக்கட்டத்தில் ஒரு இயல்பான வாழ்க்கை வாழ்ந்திடுவதற்கு இது ஒரு நல்ல மாற்று ஏற்பாடல்ல. ஆகவேதான்
ஒரு சிறுநீராக நோயாளிக்குச் சிறுநீராக இடமாற்றமே மிக அவசியமான மற்றும் ஒரே நம்பிக்கையளிக்கும் தீர்வாகத் திகழ்கிறது. சிங்கையில், தற்சமயம், 600க்கும் மேற்பட்டோர் ஓர் உறுப்பு தானத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். கல்லீரலுக்காகக் காத்துக்கொண்டிருப்போரில் சுமார் 15 பேரும், இருதயத்திற்காகக் காத்துக்கொண்டிருப்போரில் 3 பேரும் ஒவ்வொரு ஆண்டும் மரணிக்கின்றனர்.

உறுப்பு செயலிழப்பு நோயாளிக்கு மட்டுமின்றி அவரின் குடும்பத்தாருக்கும் மிகுந்த பிரச்னைகளைத் தருகிறது. ஒரு புதிய உறுப்பு மாற்று இல்லாததால், நோயாளிகள் நீண்ட காலம் துன்புற்று வலிமிகுந்த மரணத்தைச் சந்திக்கின்றனர். காரணம், மனித உடலில் ஓர் உறுப்பு செயலிழக்கும்போது அது மற்ற நோய்களையும் கஷ்டங்களையும் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு மட்டுமின்றி அவரின் குடும்பத்தாருக்கும் ஏற்படுத்திவிடுகிறது.

## உள்ளடக்கம்

**உறுப்பு *இடமாற்றம்* மற்றும் உறுப்பு *தானம்* பற்றிய இஸ்லாமிய முடிவுகள்**

1. இஸ்லாத்தில் உறுப்பு இடமாற்றம் பற்றிய முடிவு என்ன ?

2. இஸ்லாத்தில் உறுப்பு தானம் பற்றிய முடிவு என்ன ?

3. நோயென்பது விதியல்லவா அப்படியிருக்க நோயாளிகள் இறைவனின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளாமல் உறுப்பு தானத்திற்காக எதிர்பார்ப்பது சரியா ?

4. இஸ்லாம் ஏன் நம்மை உறுப்பு உறுதிமொழியளிக்க ஊக்குவிக்கிறது ?

5. முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு உறுப்பு தானம் செய்யலாமா?

**ஃபத்வா ( இஸ்லாமிய கட்டளை ) மற்றும் அதன் தொடர்பான விஷயங்கள்**

6. ஃபத்வா முடிவுகளுக்கான அடிப்படை என்ன ?

7. ஏன் உறுப்பு தானம் தொடர்பாக முயிஸ் விடுத்த ஃபத்வா காலப்போக்கில் மாறின ?

**உறுப்பு இடமாற்றத்தையொட்டிய விஷயங்கள்**

8. இறந்தவர்களிடமிருந்து உறுப்புகளை இடமாற்றம் செய்திடும் செய்முறை அவரது உடலிற்கு ஏற்படுத்தும் கண்ணியக்குறைவான செயலாகுமா ?

9. நமது உடல் அல்லாஹ்விற்கு மட்டும் சொந்தமானதாக இருப்பதால் உடலிலுள்ள எந்த உறுப்பினையும், பிறரைக் காப்பாற்ற தானம் செய்யலாமா ?

10. உறுப்பு இடமாற்றம் சார்ந்த மருத்துவ நடைமுறைகளால் ஈமச்சடங்குகள் தாமதப்படுவது அனுமதிக்கப்படுகிறதா ?

11. மூளை மரணமுற்றவர் இறந்தவராக கருதப்படலாமா ?

# உறுப்பு *இடமாற்றம்* பற்றி இஸ்லாத்தில் உள்ள முடிவு என்ன ?

உறுப்பு இடமாற்றம், செயலிழந்த அல்லது நோயுற்ற உறுப்பினை மாற்றி நோயாளியைக் குணப்படுத்திட மேற்கொள்ளப்படுகிறது. இம்மருத்துவ நடைமுறை, மற்ற மருத்துவ நடைமுறைகள் போலவே இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. காரணம், இதுவும் ஒரு மருத்துவ நிலைமைக்கான சிகிச்சையே. ஆகவே, உறுப்பு இடமாற்றம் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதே இஸ்லாமிய கல்விமான்களின் அபிப்ராயமாகும். இது மனிதனின்
நன்மையைக் கருத்தில் கொள்ளும், அக்கறைகொண்ட , மற்றும் மனிதனின் உயிரைக்காப்பதை நோக்கமாக கொண்டுள்ள ஷரியா கொள்கையோடும் ஒத்துப்போகிறது. அல்லாஹ் (சு.வ.த.) கூறுகிறான் :

مَن قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ أَوْ فَسَادٍ فِى ٱلْأَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ ٱلنَّاسَ جَمِيعًا وَمَنْ أَحْيَاهَا

فَكَأَنَّمَآ أَحْيَا ٱلنَّاسَ جَمِيعًا

அதாவது : “எவனொருவன் கொலை அல்லது நிலத்தில் விஷமங்களைப் பரப்பிட செய்வதற்காக அன்றி, கொலை செய்வது அனைவரையும் கொலை செய்வதற்கு ஒப்பாகும் : இதில் ஒருவன் ஓர் உயிரைக் காப்பாற்றினால், அவன் அங்குள்ள அனைவரின் உயிரையும் காப்பாற்றியதற்கு நிகராகும் ” 1

இருப்பினும், இடமாற்றம் கொடையாளிக்குத் தீங்கு ஏற்படுத்திவிடக்கூடாது. இன்னொரு வகையான தீங்கிற்கு வழிவகுக்கும் விதத்தில் ஒரு தீமை
நீக்கப்படக்கூடாது என்பது இஸ்லாமிய பொதுவான உண்மையின் அடிப்படையாகும்.

1 அல்’மாஇதா. வசனம் 32

# உறுப்பு *தானம்* பற்றி இஸ்லாத்தில் உள்ள முடிவு என்ன ?

இருவகையான உறுப்பு தானமுண்டு. ஒன்று உயிரோடிருக்கும் ஒரு நபரிடமிடமிருந்து எடுக்கப்படும் உறுப்பு. மற்றொன்று பிணத்திடமிருந்து பெறப்படும் உறுப்பு தானம்.

பொதுவாக, உறுப்பு தானம் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது வலியால் துன்பப்படும் ஒருவருக்கு வழங்கப்படும் விலைமதிப்பில்லா அன்பளிப்பாகும். இத்தகைய நன்கொடை, நோயாளிக்கு உதவி அளிப்பது மட்டுமின்றி அவரின் உயிரையும் காப்பாற்றும்.

இறந்தவர், தனது உறுப்பினை, தான் உயிரோடிருக்கும்போது அல்லது தனது நெருக்கமான சொந்தக்காரர் தனது உறுப்பினை உயிரோடிருப்பவருக்கு ( தேவையுடையவருக்கு) வழங்கிட சம்மதம் அளித்திருப்பின் உறுப்பு தானத்தை ஏற்றுக்கொள்ள இஸ்லாமிய கல்விமான்கள் அனுமதியளித்துள்ளனர்.

**இஸ்லாமிய சட்ட கலைக்கழகம்** [2]

“ உறுப்பு தானம் பெறுபவரின் அடிப்படை உடல் செயல்பாடுகள் அல்லது அவரது உயிர், உறுப்பு தானம் வழங்குவரைச் சார்ந்திருந்தால் உறுப்பு இடமாற்றம் நிகழலாம். ஆனால், இது இறந்தவரின் சம்மதத்தை அல்லது அவரது நெருங்கிய உறவினரின் சம்மதத்தைப்பொறுத்தே (இறந்தவரின் மரணத்திற்கு பிறகு) தீர்மானிக்கப்படுகிறது. அல்லது, இறந்தவர் அடையாளம் தெரியாதவராக அல்லது நெருங்கிய சொந்தக்காரர்கள் இல்லாதவராக இருப்பின் இஸ்லாமிய சமூகத்தினரால் தீர்மானிக்கப்படுகிறது. ” [3]

---

**2** இஸ்லாமிய சட்ட கலைக்கழகம் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் ஓர் அங்கமாகும். இது ஜனவரி 1981 ஆம் ஆண்டு மக்கா அல்-முகர்ரமா ( சௌதி அரேபியா ) நிகழ்ந்த மூன்றாம் இஸ்லாமிய உச்ச மாநாட்டின்போது உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களும் வல்லுனர்களும், இஸ்லாமிய உலகில் ஃபிக், அறிவியல், மருத்துவம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த துறையில் தலைசிறந்தவர்கள் அறிவுஜீவிகளாவர்.

**3** இது ஜெட்டாவில் 11ஆம் தேதி பிப்ரவரி மாதம் 1988ஆம் ஆண்டு இஸ்லாமிய சட்ட கலைக்கழகம் தனது நான்காவது கூட்டத்தின்போது எடுத்த முடிவாகும். அன்புகூர்ந்து “ மஜ்மா அல் ஃபிக் அல் இஸ்லாமி : கராரத் வா தௌசியத், 1985-1998 ” பக்கம் 58 காண்க.

**ரியாத் கல்விமான்களின் உச்ச மன்றம்**

“ இறந்தவரின் உறுப்புகளைப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இன்னொருவருக்கு , அது நெருக்கடியான தருணமென்றால் அவசியம் கருதி உறுப்பு இடமாற்றம் செய்ய அனுமதியுண்டு. ஒருவருக்கு உறுப்பு மிக அவசியம் தேவையென்றால் உயிரோடிருக்கும்போதும் ஒருவர் தனது உறுப்பினைத் தானம் செய்யலாம். ”[4]

**எகிப்திய முஃப்தியின் ஃபத்வா, டாக்டர் சையது தன்டாவி**

“சட்ட வல்லுநர்களின் ஒருமித்த கருத்தின்படி, ஒருவர் உயிரோடிருக்கும்போதே தன் உறுப்பினைத் தானம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. பெறுநர் சொந்தக்காரராகவும் இருக்கலாம் அல்லது அந்நியராகவும் இருக்கலாம், ஆனால் இத்தானத்தால் பயனுண்டு என்று நம்பிக்கைக்குரிய மருத்துவர் கருதுகின்ற பட்சத்தில். . . இறந்தவரின் உடலிலிருந்து உறுப்புகள் இன்னொருவரின் உயிரினைக் காப்பாற்றிட அல்லது அவரைக் குணப்படுத்திட இடமாற்றம் செய்ய அனுமதியுண்டு என்ற இந்த முடிவும் சட்ட வல்லுநர்களின் ஒருமித்த கருத்தாகும் ” [5]

**குவைத்தின் ஃபத்வா குழு**

இடமாற்றத்திற்குரிய உறுப்பு இறந்தவரிடமிருந்து எடுத்துக்கொள்ள அனுமதியுண்டு, அவர் உயிலின் மூலம் சம்மதம் தெரிவிந்திருந்தாலும் சரி மற்ற ஏற்பாடுகளாக இருப்பினும் சரி. இதன் அடிப்படை நெருக்கடி கருதி ( தருரா ), அதாவது ஓர் உயிரைக் காப்பாற்றிடுவதற்கே ஆகும். ஆரம்பத்தில் இது தடுக்கப்பட்டிருந்தாலும் நெருக்கடியின்போது உறுப்பு இடமாற்றங்களுக்கு அனுமதியுண்டு.

உறுப்பு தானம் தருபவர் உயிரோடு இருப்பின், அவரது உறுப்பினை எடுப்பதால், அதாவது இருதயம் சுவாசப்பை போன்றவற்றை, அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுமாயின் அது தடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நன்கொடையாளர் அனுமதி தந்திருப்பினும் அல்லது மற்ற ஏற்பாடாக இருந்தாலும் சரி.

---

4 ரியாத் கல்விமான்கள் உச்ச மன்றத்தின் முடிவு, சவுதி அரேபியா. தயவுசெய்து முடிவு எண் 99 காண்க, ஜுல்கயிதா 1402 H.

5 5ஆம் தேதி 1989 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது, டாக்டர் தன்டாவி, முஃப்தி பதவியிலிருந்தபோது.

இடமாற்றம் செய்யப்படவிருக்கும் உறுப்பு அல்லது உடலின் பகுதி நன்கொடையாளரின் உயிரினைப் பாதிக்காது என்றால், அல்லது அது இன்றி
அவரால் உயிர் வாழ்ந்திட முடியுமெனில் முடிவு , மற்ற இதர காரணிகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, அவ்வுறுப்பு இல்லையெனில் கொடுத்தவருக்குத் தீங்கு ஏற்படுமென்றால் ( எ.கா: கை அல்லது கால் ) இதற்கு அனுமதியில்லை. மாறாக, தானம் செய்வதால் சம்மதமளித்த கொடையாளரின் உயிருக்கு ஆபத்து இல்லையென்றால், அதாவது சிறுநீரகங்கள், பற்கள் அல்லது ரத்தம் போன்றவையால், அதற்கு அனுமதியுண்டு இதனால் அறுவை சிகிச்சையின் வெற்றி வாய்ப்புகள் கூடுமெனில் இதற்கு அனுமதியுண்டு. ”[6]

**டாக்டர் யூசுப் அல் கர்தஹாவியின் ஃபத்வா**

“ இஸ்லாமிய சட்டத்தில், ஒருவர், சிறுநீரக நோயுற்ற இன்னொருவரின் துன்பத்தைக் குறைத்திட விரும்பி, தனது ஆரோக்கியமான சிறுநீரகங்களில் ஒன்றினைத் தானமளிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. உண்மையில், இது ஒரு நல்ல செயலாகக் கருதப்படுகிறது. கொடையாளிக்கும் சன்மானம் உண்டு. இது நபியவர்களின் மரபினை அடிப்படையாகக்கொண்டது. நபியவர்கள் (ச.அ.வ.) கூறியதாகப் அறிவிக்கப்பட்டுள்ளது- மண்ணுலகில் பரிவு காட்டுபவர்கள் இறைவனின் கருணையும் அன்பையும் பெறுகிறார்கள். ஆகவே, நான், தர்மம் செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒருவர் தன்னுடைய உறுப்பையோ உடலின் ஒரு பகுதியையோ பாதிக்கப்பட்ட மற்றவருக்கு அவர் குணமடைந்திட , அவரின் செயலிழந்த உறுப்பினை மாற்றிட தனது உறுப்பினைத் தானம் தந்திட தடையில்லை என்று கருதுகிறேன். மேலும், இது தொடர் தர்மமாக ( ஜரியா) கருதப்படுகிறது. இதற்கான நற்கூலியினைக் கொடையாளி தொடர்ந்து பெற்றுக்கொண்டே இருப்பார், இவரது உறுப்பினால் பயன் இருக்கும்வரை.”[7]

---

6 குவைத்தின் ஃபத்வா குழு 1979 வெளியிட்ட முடிவு எண் 132
7 டாக்டர் யூசுப் அல் கர்தஹாவியின் “ ஃபதாவா மு’அசாரா” மூன்றாம் பதிப்பு, பக்கம் 532-537

*மலேசிய தேசிய ஃபத்வா மன்றத்தின் ஃபத்வா*

*" பிணத்தின் கண் மற்றும் இதயம் இடமாற்றத்திற்கு அனுமதியுண்டு, பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்பட்டால் :*

- *மிகவும் நெருக்கடியான அல்லது அவசர தேவையின்போது, உறுப்பினைப் பெறுபவரின் உயிர் இதனைச் சார்ந்து இருக்கும்பட்சத்தில், மற்றும் இந்த உறுப்பு இடமாற்ற செயல்முறை வெற்றிபெறும் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பின்.*

- *இருதய இடமாற்ற சிகிச்சைக்கு முன்னர், தானமளிப்பவரின் மரணம் உறுதிசெய்யப்பட்டிருக்கவேண்டும்*

- *சம்பந்தப்பட்ட உறுப்புகள் சாகடிக்கப்பட்டோ ( கொலைசெய்யப்பட்டோ ) அல்லது வர்த்தகத்திலோ ஈடுபடுத்தப்படாமல் இருத்தல் முறையான நடவடிக்கையின் மூலம் உறுதிசெய்யப்பட்டிருக்கவேண்டும். "[8]*

**சிங்கை இஸ்லாமியச் சமய மன்றம் ( MUIS ) பிரப்பித்த ஃபத்வாக்கள்**

சிங்கை இஸ்லாமிய சமய மன்றம் 1973 ஆம் ஆண்டிலிருந்து பல ஃபத்வாக்களைப் பிரப்பித்திருக்கிறது. ஒருவர் தனது சிறுநீரகங்களை சிறுநீரக நோயாளிக்குத் ஓர் உறுதிமொழியாக ( உயிலின் அமைப்பில் )தானமளித்திட அனுமதியில்லை என்று 1973 ஆம் ஆண்டில் ஒரு ஃபத்வா குறிப்பிட்டுள்ளது.

இம்முடிவிற்கான அடிப்படை யாதெனில், ஒருவருக்கு அவருடைய உடல் சொந்தமானதல்ல. ஆகவே அவருக்கு அதன்மீது எந்த உரிமையும் இல்லை என்பதேயாகும். மேலும், அச்சமயம் சிறுநீரக பிரச்னையின் கடுமை, இதனைக் குணப்படுத்த மாற்று வழியுண்டா என்பது தொடர்பான தகவல் போதுமானதாக இல்லை. அதோடு, அக்காலக்கட்டத்தில், அன்றைய மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியும் இவ்வித உறுப்பு இடமாற்றம் மருத்துவ பிரச்னையைத் தீர்ப்பதில் வெற்றியளித்திடும் என்று நிறைவான பதில் தரவில்லை.

---

மலேசியாவின் இஸ்லாமிய விவகாரத்திற்கான தேசிய ஃபத்வா மன்ற முதல் கூட்டத்தின் அறிவிப்பின் போது ( 23-24 June1970 )

## 1986 ஃபத்வா

மேற்கண்ட ஃபத்வா 1986-ஆம் ஆண்டு மறுபரீசிலனைச் செய்யப்பட்டது. இவ்வாண்டில், ஃபத்வா குழு, அவசிய தேவை கருதி உயிர்களைக் காப்பாற்றிட உறுப்பு இடமாற்றம் அனுமதிப்படுகிறது என்று ஃபத்வா பிரப்பித்தது. இது பல ஃபிக்ஹூ மன்றங்கள், அனைத்துலக கல்விமான்களின் நிலைகளோடு ஒத்துப்போகிறது. இது " இக்கட்டான சூழ்நிலைகளில் ( தருரா ), விலக்கப்பட்டது அனுமதிக்கப்பட்டதாக மாறுகிறது" என்ற இஸ்லாமிய சட்ட இயலில் உயர் கோட்பாட்டின் அடிப்படையாகும் ஆகும். மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள பெரிய முன்னேற்றம், உறுப்பு செயலிழந்த ஒருவருக்கு உறுப்பு இடமாற்ற சிகிச்சையால் வெற்றி கிடைத்திடும் அளவும் அதிகரித்துவருவதைக் காட்டுகிறது.

இதனுடன்,உறுப்பு இடமாற்றம் தொடர்பான இன்னும் சில ஃபத்வாக்கள், ஃபத்வா குழுவினால் பிரப்பிக்கப்பட்டுள்ளன.1995-ஆம் ஆண்டு , இக்குழு கண் நோயாளிகளின் துன்பங்களைக் குறைத்திடும் அடிப்படையில் விழி வெண்படல ஒட்டிற்கு(இடமாற்றத்திற்கு ) அனுமதியளித்தது. 2003-ஆம், 2004-ஆம் ஆண்டில், இக்குழு, இருதயத்தையும் கல்லீரலையும் நன்கொடை அளிக்கலாம் ( முபா ) சிறுநீரகங்கள் போலவே என்று முடிவளித்தது.

மேலும், இக்குழு, தானம் தருபவர் அளித்திடும் உறுதிமொழிக்குச் சாட்சியாக நெருங்கிய உறவினர் மட்டுமே இருக்கமுடியும் என்பதை மாற்றி, இரு ஆண் சாட்சிகள் போதுமென்று முடிவளித்தது.

இந்த ஃபத்வாக்கள், சமகால கல்விமான்கள், அனைத்துலக சட்ட மன்றங்களின் பொதுவான உடன்பாட்டினைப் பெற்றுள்ளது.

சுருக்கமாகக் கூறினால், சம்மதமளித்த இறந்தவரின் உறுப்புகளை இன்னொருவரின் உயிரினைக் காப்பாற்றிட உறுப்பு இடமாற்றம் செய்ய அனுமதியுண்டு. இச்சம்மதத்தை, இறந்தவர் அளித்திட தவறியிருப்பின், அவரின் நெருங்கிய உறவினரின் சம்மதத்தின் வழியாக உறுப்பு இடமாற்றம் இடம்பெற அனுமதியுண்டு.

## நோயென்பது விதியல்லவா அப்படியிருக்க நோயாளிகள் இறைவனின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளாமல் உறுப்பு தானத்திற்காக எதிர்பார்ப்பது சரியா ?

இஸ்லாமிய கொள்கை, நம்மை, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தக்தீர் மற்றும் விதியினை நம்பவேண்டும் என்று கற்பிக்கிறது. இருப்பினும், நாம் சந்திக்கின்ற பிரச்னைகளுக்கான பொருத்தமான தீர்வுகளை விதிகளின் கைகளின் விட்டுவிடாது, அதனைத் தேடிக் கண்டுபிடித்திட வேண்டிய அவசியம் நமக்குண்டு. அல்லாஹ் (சு.வ.த) நம்மீது தனது அருளினைச்
சொரிகிறான், அளக்கிறான் என்று நாம் நம்பிக்கை வைத்திருப்பினும் , நாம் அன்றாடம் உணவிற்கு உழைத்திட வேண்டிய கடமை நமக்குண்டு. இதுபோலவே, இஸ்லாம் நம்முடைய நோயிற்கான நிவாரணிகளைத் தேடி, அதன் முழு வெற்றியினை அல்லாஹ்வின் (சு.வ.த) கைகளின் ஒப்படைத்திடவேண்டும் என்று கற்பிக்கிறது. புனித நபியவர்களும் (ச.அ.வ)
கூறியுள்ளார்கள் :

"ما أنزل الله داء إلا أنزل له شفاء"

அதாவது, " அல்லாஹ் அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் நல்கியுள்ளான்."

( அல்-புகாரியின் ஹதீஸ் )

உறுப்பு தேவையுடையவர்களுக்கு முஸ்லிம் சமூகத்தினரிடமிருந்து அதனைப் பெற உரிமையுண்டு. அதோடு, நோயுற்ற ஒருவர் தனது நோயிற்கான நிவாரிணியைத் தேடவேண்டிய பொறுப்பும் அவருக்குண்டு. இதில், செயலிழந்துவரும் உறுப்புக்கான மாற்று உறுப்பினைத் தேடவேண்டிய பொறுப்பும் உள்ளடங்கும். இதுபோன்றே ,இஸ்லாமிய சமூகத்தாருக்கும், தனக்கு தீங்கு ஏற்படாது என்னும் பட்சத்தில், நோயுற்ற ஒருவரின் உயிரை நீட்டிக்க, அவரது துன்பத்தைக் குறைத்திட உதவிக்கரம் நீட்டவேண்டிய பங்குண்டு. இஸ்லாம், நமது உடலுக்குத் தீங்கு ஏற்படாது என்னும் பட்சத்தில், நாம் பிறருக்கு நமது உறுப்பினைத் தானமளித்திட அனுமதியளித்து அதற்கு வழிவகை செய்து தருகிறது.

# இஸ்லாம் ஏன் நம்மை உறுப்பு உறுதிமொழியளிக்க ஊக்குவிக்கிறது ?

உறுப்புகளைத் தானமளிக்க உறுதிமொழி அளிப்பது இஸ்லாத்தில் வலுவாகப் பரிந்துரை செய்யப்படுகிறது. இத்தகைய நடைமுறை, உலகிற்கே பொதுவான மனிதாபிமான நிறைந்த இஸ்லாமிய கொள்கைகளோடு ஒத்துபோகிறது. இது *ரஹ்மா*வையும் உள்ளடக்கும். அதாவது, இரக்கம் காட்டுதல், பிறருக்கு உதவிசெய்தல், தொடர் தர்மம் ( *ஜாரியா* ) செய்தல்.

உறுப்பு உறுதிமொழியளிக்கும் நடைமுறை, ரஹ்மா மற்றும் இரக்கம் போன்ற ஆன்மாவைத் தனக்குள் கொண்டுள்ளது. அல்லாஹ் ( சு.வ.த. ) இத்தகைய உறுதிமொழி அளித்திடும் ஒரு நபருக்கு, அவரின் உறுப்பு இடமாற்றம் செய்யப்படாவிட்டாலும், இஸ்லாத்தின் கொள்கைகளான *ரஹ்மா* மற்றும் *இஹ்சானைப்* பிரதிபலிக்கும் அவரின் நல்ல நோக்கத்தையும் செயலையும் கருத்தில்கொண்டு நற்கூலி வழங்குவான். புனித நபியவர்கள் ( ச.அ.வ) கூறியுள்ளார்கள் :

"الراحمون يرحمهم الرحمن ارحم من في الأرض يرحمكم من في السماء"

அதாவது, " நிகரற்ற அன்புடையோனாகிய அல்லாஹ், பிறர்மீது அன்பு காட்டிடும் ஒருவர்மீது தனது அன்பு மழையினைப் பொழிகிறான். இவ்வுலகில் அன்பு காட்டுங்கள் , சுவனத்திலுள்ள அவன் ( இறைவன் ) உன்மீதி அன்பு காட்டிடுவான். " ( தர்மீதி உரைத்த ஹதீஸ் )

இஸ்லாம், மனிதர்களுக்கிடையே *த'ஆவுன்* ( ஒருவருக்கொருவர் உதவி செய்தல் ) பண்பினை வலியுறுத்துகிறது. நோயுற்ற ஒருவர் தன்னுடைய உயிர் வாழ்விற்கு ஓர் உறுப்பை நம்பியிருப்பின் அவர் நிச்சயமாக தேவையுடையவர்களுள் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்படுவார். அவருக்கு எதன் மூலமாகவும் உதவவேண்டும். அதே வேளையில், இந்த நன்கொடை அவரின் குடும்பச் சுமையையும் எளிதாக்கும். உதாரணத்திற்கு, ஒரு சிறுநீரக நோயாளி சுத்திகரிப்பிற்கு அதிக பணம் செலவளிக்க வேண்டியுள்ளது. இது அவருக்கும் குடும்பத்தாருக்கும் பெரிய பணக் கஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு பலியாவது பிள்ளைகளின் கல்வி, முழு குடும்பத்தின் நன்மை.இது அந்நோயாளிக்கு சிறுநீரகங்கள் கிடைக்கும்வரை தொடர்கிறது. ஆகவே, இஸ்லாமியச் சமூகம் இத்தகையோருக்கு முழு முயற்சியெடுத்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்திடவேண்டும். இது இஸ்லாமிய சட்டத்திற்கு முரண்பாடில்லாத முறையில் இருத்தல் அவசியம்.

அல்லாஹ் ( சு.வ.த. ) கூறுகிறான் :

وَتَعَاوَنُوا۟ عَلَى ٱلْبِرِّ وَٱلتَّقْوَىٰ ۖ وَلَا تَعَاوَنُوا۟ عَلَى ٱلْإِثْمِ وَٱلْعُدْوَٰنِ ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۖ إِنَّ ٱللَّهَ شَدِيدُ

ٱلْعِقَابِ ﴿٢﴾

அதாவது : "ஒருவருக்கொருவர் நல்லவற்றிலும் சமய ஈடுபாட்டிலும் உதவி செய்திடுங்கள், பாவத்திற்கும் வெறித்தனத்திற்கும் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டாம்; அல்லாஹ்விற்கான உங்களின் கடமையில் கவனமாக இருந்திடுங்கள்; நிச்சயமாக கெட்டதிற்கு அல்லாஹ் வழங்கிடும் தண்டனை கடுமையானது"[8]

மேலும், உறுப்பு தானம் ஒரு தொடர் தர்மமாகும் ( ஜாரியா) , அதாவது, அதற்கான நற்கூலிகள், கொடையாளி மரணித்தப்பின்னரும் தொடரும், அதன்மூலம் பயன்பெறும் ( எந்த ரூபத்தில் இருந்தாலும் ) நபர் இருக்கும்வரை. புனித நபியவர்கள் (ச.அ.வ) கூறியுள்ளார்கள் :

"إذا مات ابن آدم انقطع عمله إلا من ثلاث صدقة جارية وعلم ينتفع به وولد صالح

يدعو له"

அதாவது, " மனித இனத்தின் அனைத்து செயலும் நின்றுவிடும் ஒருவர் மரணித்தப் பிறகு, பின்வரும் மூன்று செயல்களைத் தவிர : தொடர் தர்மச் செயல், பிறருக்குப் பயனளித்த அறிவு , பக்தியுள்ள வாரிசு தன் பெற்றோருக்காகச் செய்திடும் வணக்கங்கள் "
( தர்மீதி உரைத்த ஹதீஸ் )

மிக முக்கியமாக, இது நோயாளிக்கு உயிர் வாழ்ந்திட ஒரு புதிய வாய்ப்பினையும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தி, அவரும் அவரின் குடும்பத்தார் சந்தித்திடும் வலியினையும் துன்பத்தையும் நீக்குகிறது.

---

8 அல்-மா' இதா, வசனம் 2

## முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு உறுப்பு தானம் செய்யலாமா?

நபி முகம்மது (ச.அ.வ ), இறைவனின் திருத்தூதர், இந்த பிரபஞ்சத்திற்கும் மனித குலத்திற்கும் அருளையும் ரஹ்மத்தையும் கொண்டுவர அனுப்பப்பட்ட *ரஹ்மத்தன் லில் ஆலமீன்.* ஆகவே, இஸ்லாம் அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்திருக்கும் நன்மை செய்யவும் கருணை காட்டவும் போதிக்கிறது. இது முஸ்லிம்களோடு நிம்மதியாக வாழும் முஸ்லிம் அல்லாதவர்களையும் உள்ளடக்குகிறது. புனித திருக்குர்ஆன் முஸ்லிம்களை நல்லது செய்யவும், பிறருக்கு உதவி வழங்கிடவும் மனித குலத்திற்கு நன்மை பயக்கும் எல்லாவற்றிலும் ஒத்துழைத்திட ஏவுகிறது.

அல்லாஹ் ( சு.வ.த) மொழிகிறான்
:

لَّا يَنْهَىٰكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ لَمْ يُقَٰتِلُوكُمْ فِى ٱلدِّينِ وَلَمْ يُخْرِجُوكُم مِّن دِيَٰرِكُمْ أَن تَبَرُّوهُمْ
وَتُقْسِطُوٓا۟ إِلَيْهِمْ ۚ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلْمُقْسِطِينَ ﴿٨﴾

அதாவது : “உங்கள்மீது உங்கள் மதத்தைக் காரணம் காட்டி போர் புரியாதவர்கள், வீட்டைவிட்டு துரத்தாதவர்கள் மீது நீங்கள் மரியாதை செலுத்துவதை அல்லாஹ் தடுக்கவில்லை. அவர்களிடம் பரிவு காட்டுங்கள், நியாயமாக நடந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக, நியாயமாக நடப்பவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்.” [9]

புனித திருக்குர்ஆனும், அல்லாஹ் ( சு.வ.த) பிறருக்கு உதவி செய்பவர்களுக்கு நற்கூலி அளிக்கிறான், அத்தகைய உதவியையும் பங்களிப்பையும் ஆசிர்வதிக்கிறான் என்று சொல்கிறது.

۞ لَّيْسَ عَلَيْكَ هُدَىٰهُمْ وَلَٰكِنَّ ٱللَّهَ يَهْدِى مَن يَشَآءُ ۗ وَمَا تُنفِقُوا۟ مِنْ خَيْرٍ
فَلِأَنفُسِكُمْ ۚ وَمَا تُنفِقُونَ إِلَّا ٱبْتِغَآءَ وَجْهِ ٱللَّهِ ۚ وَمَا تُنفِقُوا۟ مِنْ خَيْرٍ يُوَفَّ إِلَيْكُمْ
وَأَنتُمْ لَا تُظْلَمُونَ ﴿٢٧٢﴾

---

9 அல்-மும்தாஹானாஹ், வசனம் 8

அதாவது : “ அவர்களை நேர்வழியில் நடக்கச் செய்வது உமக்கு (ஓ! நபியே ) கடமையில்லை, ஆனால் அல்லாஹ் யாரை விரும்புகிறானோ அவனை நேர்வழிக்கு இட்டுச்செல்கிறான் ; நீ செலவழிக்கும் நல்லது உனது நன்மைக்கே ; இச்செலவு இறைவனின் சந்தோஷத்தை மட்டுமே நாடவேண்டும் ; நீ செலவழிக்கின்ற நல்லவை உனக்கு முழுமையாக திருப்பிக்கொடுக்கப்படும், உனக்கு தவறு இழைக்கப்படாது” [10]

புனித நபியவர்கள் (ச.அ.வ ) அனைத்து முஸ்லிம்களும் தங்களின் காரியங்களை இஹ்சானோடு ( இரக்கத்தோடு ) மேற்கொள்ள வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சொல்லியுள்ளார்கள். இஹ்சான் கொண்டிருத்தல் என்பது அனைத்து மனிதர்களுக்கும் ( முஸ்லிம் அல்லாதவர்கள் ) நல்லது செய்வதையும், உதவுவதையும் , பரிவு காட்டுவதையும் குறிக்கிறது. புனித நபியவர்கள் ( ச.அ.வ ) கூறுகிறார்கள் :

"إن الله كتب الإحسان على كل شيئ"

அதாவது , நிச்சயமாக, அல்லாஹ் செய்யப்பட்ட அனைத்திலும் இஹ்சான் இருத்தல் அவசியம் என்று கட்டளையிடுகிறான்.

( தர்மீதி உரைத்த ஹதீஸ் )

10 அல்- பகாரா , வசனம் 272

## ஃபத்வா ( இஸ்லாமிய கட்டளை ) மற்றும் அதன் தொடர்பான விஷயங்கள்

### ஃபத்வா முடிவுகளுக்கான அடிப்படை என்ன ?

இஸ்லாமிய சட்ட இயலில் ஃபத்வா முக்கியமான ஒரு கருவியாகும், குறிப்பாக, மாற்றங்களும் சவால்களும் நிறைந்த காலக்கட்டங்களில். நமது சமூகம், ஆழமாக ஆராய்ந்து பொருத்தமான இஸ்லாமிய பதில்களையும் தீர்வுகளையும் நாடும் பல விஷயங்களைச் சந்திக்கிறது. இந்த அடிப்படையில், ஃபத்வா முஸ்லிம்களின் சமய வாழ்வில் முக்கிய ஓர் பங்கினையும் கணிசமான தாக்கத்தையும் ஏற்படுகிறது. குறிப்பாக, பல மதங்கள் கொண்ட, மத சார்பற்ற அரசாட்சியுடைய சிங்கையில் சிறுபான்மையினராகத் திகழும் முஸ்லிம்களுக்கு இது மிகப்பொருந்தும்.

இத்தகைய சவால்களைச் சமாளிக்க, ஃபத்வாக்கள் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பிரப்பிக்கப்படுகின்றன :

- ஃபத்வா ஷரியாவின் முக்கியமான மூலங்களைக் குறித்துக்கொள்ளும். இது ஷரியாவின் ஆன்மாவையும் நோக்கங்களையும் ( *மகாசித்* ) உள்ளடக்கும்.

- புனித குர்ஆன், சுன்னத் ( நபியவர்களின் மரபுகள் ) முக்கியமான குறிப்பெடுக்கும் மூலங்களாக இருப்பினும், இதனைத் தவிர்த்து கல்விமான்கள் ஆமோதிக்கும் *இஜ்மா,கியாஸ்* போன்றவைகளும் சட்டங்களுக்கு மூலமாகின்றன. சட்டங்களின் நோக்கங்களான, மதம், உயிர்,அறிவு,சொத்து,மரபுவழி காத்தல் போன்றவையும் ஃபத்வாவில் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

- ஃபத்வா சமூகத்தின் விருப்பங்களையும் நலனையும் பாதுகாத்திட நாடுகிறது.

  ஃபத்வா, தனிநபர்களின் உரிமைகளையும் கடமைகளையும் மட்டுமின்றி சமூகத்தின் பொதுவான விருப்பம் நலன் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும். ஆகவே, ஃபத்வா பிரபிக்கப்படுவதற்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் சூழ்நிலை, தேவைகள், பின்புலம் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

- இஸ்லாமிய ஒழுக்க நெறிகளுக்கு முரண்படாத, ஒரு தனிப்பட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமான, அதாவது சிங்கப்பூர் சூழ்நிலைக்கு நன்கு பொருந்தும் தீர்வினை அல்லது அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்தல் அவசியம். இது முஸ்லிம்கள் தங்கள் மதத்தினை இலகுவாகப் பின்பற்றிட, தங்கள் கடமைகளைக் கஷ்டமின்றி நிறைவேற்றிட , சட்டங்களால் அழுத்தப்படாமல் இருத்தல் முக்கியம்.[11]

---

11 ஆசியான் நாடுகள் பிரப்பித்த ஃபத்வா, பேராசிரியர் ஹாஜி அப்துல் சமது மூசா, டாக்டர் எடல் எம். அப்துல் அஜீஸ், ஹலிசா ஹருன், நிக் சலிடா சுஹைலா நிக் சாலே, பக்கம் 123.

## ஏன் உறுப்பு தானம் தொடர்பாக முயிஸ் விடுத்த ஃபத்வா காலப்போக்கில் மாறின ?

இஸ்லாமிய சட்டங்களின் பயன்பாடு, அந்தந்த இடம்,நேரம்,சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருத்தல் அவசியம். இமாம் இப்னு ஸிஹாப் அல்-குராஃபி அவர்கள், தனிப்பட்ட கலாச்சாரம் அல்லது சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வரையப்படும் சட்டம் காலப்போக்கில் அந்த கலாச்சாரம் / சூழ்நிலையோடு சேர்ந்து படிப்படியாக வளர்ச்சியுறும் என்று விளக்கமளிக்கிறார். ஆகவே, இச்சட்டங்கள் கலாச்சாரங்கள் மாறும்போதும் மாறியும் அவை மாறாதபோது மாற்றம் காணாது நிலைபெறும்.12 இது ஷரியாவில் இடம்பெற்றுள்ள நெகிழ்வுத்தன்மையுள்ள கூறுகளைப் பொருத்தமட்டில் உண்மையாகும். இந்த நெகிழ்வுத் தன்மையுள்ள கூறுகள் அப்போதைய காலக்கட்டத்தின் சமூகச் சூழல், இடம் , நிலைக்கு ஏற்றவாறு மாறும். இத்தகைய நெகிழ்வுத்தன்மையும் ஆற்றலுடைமையும் ஒரு மதம் எல்லா காலக்கட்டத்திற்கும் பொருத்தமானதாக திகழ்ந்திட துணைபுரியும்.

மேற்கண்டவற்றை அடிப்படையாகக்கொண்டு, உறுப்பு தானம் தொடர்பாக ஃபத்வா குழு பிரப்பித்த ஃபத்வாக்கள் காலப்போக்கில் மாறிவந்துள்ளன. ஏன் ஃபத்வாக்கள் மாற்றம் கண்டன என்பதற்கான காரணங்களுள் சில மட்டும் பின்வருவன :

- **இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் பார்வைகள்**
  இதனையொட்டிய பொதுவான சட்டவியல் உடன்பாடு என்பது அண்மைய வளர்ச்சியே. கடந்த காலத்தில், சிறுநீரக நன்கொடை தொடர்பாக ஃபத்வா குழு பிரப்பித்த முதல் ஃபத்வா அக்கால சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.மேலும், அது அக்கால கல்விமான்களின் கருத்தோடு ஒத்திருந்தது. சூழ்நிலை மாறும்போது,ஃபத்வா,பொருத்தமானதாக அமைந்திடவேண்டுமென்றால் அது காலத்திற்குக் காலம் மறுபரீசிலனை செய்யப்படவேண்டும்.

- **இப்போதைய தேவையும் அவசரமும்**
  மருத்துவ ஆராய்ச்சிகள், உறுப்பு தானம் மிக்க அவசியமென்று காட்டுகின்றன. வேறு எந்த மருத்துவ முறையும் உறுப்பு செயலிழந்த ஒரு நோயாளியைக் குணப்படுத்திவிடலாம் என்று சொல்லவில்லை. உறுப்புகள் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை, உறுப்பு தானம் செய்யக்கூடியவர்களைவிட மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளது என்பது நன்கொடையாளர்களுக்கான அவசர தேவையைக் காட்டுகிறது. இச்சூழ்நிலை நெருக்கடி கால நிலையை ( தருரா) அடைந்துவிட்டதனால், இதற்கொரு பொருத்தமான தீர்வு அவசியமாகிவிட்டது.

---

12 அல்-வாஜிஸ் ஃபி உசுல் அல்-ஃபிக், அப்துல் கரீம் ஜைடான், பக்.257

- மருத்துவ அறிவியலில் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம்

ஃபத்வா தொடர்பான முடிவுகள், சமூகத்தின் முன்னேற்றங்களுக்கு ஏற்பவும் தொடர்ந்து மாறிவரும் தேவைகளுக்கேற்பவும் ஈடுகொடுக்கவேண்டும்.கடந்த சில பத்தாண்டுகளில் மருந்துகள் தொடர்பான அறிவு பன்மடங்கு பெருகிவிட்டது. புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வின்வழி கண்டறிந்த புதிய உத்திகளின் விளைவாக உறுப்பு இடமாற்றங்களின் வெற்றியின் அளவு மிகுந்த முன்னேற்றம் அடைந்துவருகிறது. ஆகவே, உறுப்பு இடமாற்றம் ஒரு இயலக்கூடிய சிகிச்சை முறையாக ஆகிவிட்டதனால் இது இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், முன்பு, உறுப்பு இடமாற்ற சிகிச்சை, நோயாளிகளைக் குணப்படுத்துவதில் வெற்றியளித்திடுமா என்பதில் ஒரு தெளிவில்லாததால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இஸ்லாமிய வரலாற்றில், சில விஷயங்களில் ஃபத்வாக்கள் மாறியதற்கான உதாரணங்கள் உள்ளன. உதாரணத்திற்கு, மாபெரும் சட்ட வல்லுநர், இமாம் அபூ ஹனிபா அவர்களின் காலக்கட்டத்தில் அவரின் சமூகத்தினர் மிகுந்த நீதியுடனும் நியாயத்துடனும் வாழ்ந்து வந்தனர். ஆகவே, *கிசாஸ்* அல்லது *ஹுதூது* தவிர்த்து மற்றவைக்கு சீரிய உறுதியளித்தல், சத்திய பிரமானம் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

இருப்பினும், அவருடைய மஸ்ஹாபைச் சார்ந்த இரு மாணவர்கள், இமாம் அபூ யூசுபும் முகமதும், சத்திய பிரமானத்தைக் கட்டாயமாக்கினார்.காரணம், அவர்கள் வாழ்ந்த காலக்கட்டத்தில் இஸ்லாமிய சமூகத்தினரிடையே அறநெறி சார்ந்த நேர்மை குறைந்து காணப்பட்டது ; ஏமாற்றுவது பரவலாகவும் அடிப்படை மனித உரிமை அத்துமீறல்கள் அதிகமாக இடம்பெற்றன. இத்தகைய வழக்குகளில் காணப்படும் வேறுபட்ட அபிப்ராயங்கள் அல்லது *இக்திலாஃப்* பற்றி கல்விமான்கள் கூறுகையில் , சட்டம் இங்கு வேறு மாதிரி செயல்படுத்தப்பட்டதின் காரணம், விளக்கப்படுத்துவதில் ஏற்பட்ட வேறுபாடு அல்ல, மாறாக, வெவ்வேறு நிலைமையும் சூழ்நிலையால் ஏற்பட்ட விளைவேயாகும் .
இதற்கொப்ப, ஃபத்வாக்களை மறுபரீசிலனை செய்வதாலும் மாற்றுவதனால் மூலமே நாம் நமது சமூகத்தின் நலனையும் விருப்பங்களையும் பாதுகாத்திட இயலும்.இதையே முன்னைய சட்ட வல்லுநர்கள் பின்பற்றினர். குறிப்பாக, சமுதாய சூழ்நிலை வேறு மாதிரியான முடிவுகளை எதிர்நோக்கிய வண்ணம் இருந்திடும்போது முன்னைய முன்உதாரணங்கள் பயன்தராது. ஷரியா சம்பந்தப்பட்ட விஷயங்களில் இத்தகைய மறுமதிப்பீடு செய்யப்படலாம், காரணம் இது ஆற்றலுடைமை வாய்ந்தது, முன்னரே முடிவுசெய்யப்பட்டு மாற்ற முடியாத ஒன்றல்ல.

## இறந்தவர்களிடமிருந்து உறுப்புகளை இடமாற்றம் செய்திடும் செய்முறை அவரது உடலிற்கு ஏற்படுத்தும் கண்ணியக் குறைவான செயலாகுமா ?

பொதுவாக, இறந்தவர்களின் கண்ணியத்திற்கு பங்கம் விளைவிப்பது தடுக்கப்பட்டுள்ளது, நபியவர்கள்(ச.அ.வ) விளக்கியுள்ளதுபோல்:

"كسر عظم الميت ككسره حيا"

அதாவது : பிணத்தின் எலும்புகளை முறிப்பது, உயிரோடிருப்பவரின் எலும்புகளை முறிப்பதற்குச் சமமாகும். (இப்னு மஜா உரைத்த ஹதீஸ்)

ஆகவே, உயிரோடிருக்கும் நபருக்கு அளிக்கப்படும் அதே மரியாதை இறந்தவருக்கும் அளிக்கப்படவேண்டும். இருப்பினும், மேற்கண்ட ஹதீஸ் இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட செயலான, ஒரு உடலில் செய்யப்படும் செயல் அல்லது அத்துமீறலைக் குறிப்பிடுகிறது. மேற்கண்ட ஹதீஸ் பிணத்தை முடமாக்கும் செயலைத் தடுக்கிறது. இத்தகையச் செயல் இஸ்லாத்திற்கு முந்திய காலக்கட்டத்தில், குறிப்பாக, போரில் மரணமுற்றவர்கள் மீது செயல்படுத்தப்பட்டது.

இருப்பினும், இஸ்லாமியச் சட்டம் பிணங்கள் மீது, அதாவது, இறந்த தாயின் மீது சிசேரியன் அறுவை சிகிச்சை மூலமாக குழந்தையின் உயிரைக் காப்பாற்றுதல், அல்லது வைரம் போன்ற விலையுயர்ந்த பொருளை உடலிலிருந்து பெயர்த்தெடுத்தல் போன்ற செயல்களை அனுமதிக்கிறது. ஆகவே, ஓர் உயிரைக் காப்பாற்றும் நோக்கத்துடன் இறந்தவர் உடலின்மீது
செய்யப்படும் அறுவை சிகிச்சைக்கு இஸ்லாத்தில் அனுமதியுண்டு. இது நபியவர்கள் (ச.அ.வ) குறிப்பிட்ட , பிணத்தை முடமாக்குதல் என்ற பிரிவிற்குள் அடங்காது.

டாக்டர் யூசுப் அல்-கர்தாவி இவ்வாறு விளக்குகிறார்கள் :

“ ஒரு பிணத்திலிருந்து ஓர் உடற்பகுதியை நீக்குதல் இறந்தவரின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவித்தது ஆகாது. உடலின் கண்ணியம் பாதுகாக்கப்பட்டது, பங்கப்படவில்லை. ஏனெனில், பிணத்தின்மீது செய்யப்பட்ட அறுவை சிகிச்சை, உயிரோடிருப்பவர் மீது எவ்வளவு அக்கறையுடன், மிக்க கவனத்துடன் மரியாதையுடன் செய்யப்பட்டதோ அதே விதத்தில் மேற்கொள்ளப்பட்டதால்.” [13]

---

13 டாக்டர் யூசுப் அல்-கர்தாவி, ஃபதாவா மு’அசர, பாகம் 3, பக்.665-666

மானுட கண்ணியம், ஒரு பிணம் மரியாதைக்குரியது என்றும் அதன்மீது அறுவை சிகிச்சை செய்திடும் குழு, அதை மிக்க பொறுப்புடன் நிறைவேற்றிடவேண்டும் என்றும் கோருகிறது. சிங்கப்பூரில், சுகாதார அமைச்சு உறுப்பு இடமாற்றம் தொடர்பான செய்முறை அறநெறி கோட்பாட்டிற்கு உட்பட்டிருப்பதை உறுதிசெய்து மிக்க அணுக்கமாகக் கண்காணிக்கிறது.

## நமது உடல் அல்லாஹ்விற்கு மட்டும் சொந்தமானதாக இருப்பதால் உடலிலுள்ள எந்த உறுப்பினையும் பிறரைக் காப்பாற்ற தானம் செய்யலாமா ?

மனிதர்கள் தங்கள் உடலை முறையே பராமரிக்க வேண்டிய பொறுப்பு உடையவர்கள். ஆதலால், நாம் நமது உடலை ஒழுங்காக பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன்மீது எந்த தீங்கினையும் ஏற்படுத்திவிடக்கூடாது. அப்படியிருக்க, நாம் மனித உறுப்புகளை வாங்கவோ விற்கவோ கூடாது. ஆனாலும், மனித உயிரினைக் காப்பாற்றிட நமது மரணத்திற்குப்பின் பயன்படுத்தாத உறுப்பினைத் தானமளித்து பிறர் பயன்படுத்தவிடலாம். உண்மையில், தேவையுள்ளோருக்கு நமது உறுப்புகளைத் தானம் செய்வதால் நமது உறுப்பு தொடர்ந்து செயல்படுகிறது, மற்றவர் உடலில். இது, நமது உடல் அல்லாஹ்விற்கு (சு.வ.த.) சொந்தமானது என்ற கருத்தோடு முரண்படவில்லை.மாறாக, அல்லாஹ்வின் அருளை மிகச் சிறந்த வழியில் பயன்படுத்தவேண்டும் என்ற கட்டளையோடு ஒத்துப்போகிறது.

## உறுப்பு இடமாற்றம் சார்ந்த மருத்துவ நடைமுறைகளால் ஈமச்சடங்குகள் தாமதப்படுவது அனுமதிக்கப்படுகிறதா ?

இஸ்லாத்தில், தக்க காரணமின்றி ஈமச்சடங்குகள் தாமதப்படக்கூடாது. இருப்பினும், மனித உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டு உறுப்பு இடமாற்ற செய்முறையினால் அவை தாமதமப்படும்போது இதை தக்க காரணமாக இஸ்லாமிய சட்டம் ஏற்றுக்கொள்கிறது. ஆகவே, இத்தகைய சூழலில் ஈமச்சடங்குகளைத் தாமதப்படுத்த இஸ்லாமிய சட்டம் அனுமதிக்கிறது. இருப்பினும், மருத்துவமனை அதிகாரத்துவம் இத்தகைய தாமதத்தை முடிந்தவரை குறைத்திட முயற்சிசெய்யவேண்டும்.

## மூளை மரணமுற்றவர் இறந்தவராக கருதப்படலாமா ?

மூளை மரணம் என்பது மூளையின் செயல்பாடுகள் அனைத்தும் முற்றிலும் இயங்காது நின்றுபோதல் அல்லது மாற்றமுடியாத நிலையினை அடைதலைக் குறிக்கும். மூளை மரணமுற்றவரால் சுயமாக மூச்சுவிட இயலாது. அவர் மூச்சுவிடும் இயந்திரத்தின் துணையால் மட்டுமே மூச்சுவிட முடியும். இந்த
இயந்திரத்தை நிறுத்திவிட்டால், ஒருவரின் இருதயம் துடிப்பது நின்றுவிடும், ஏனென்றால் மூளையின் செயல்பாடு நின்றுவிட்டதால்.

மூளை மரணமுற்ற ஒருவர் உண்மையிலேயே தெளிவாக இறந்துவிட்டார். இதுவே அனைத்துலக மருத்துவ சமூகத்தின் அறிவியல் நிலையாகும். இந்த வரையறை முயிஸின் ஃபத்வா குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

***உறுப்பு தானம் பெறும் ஒருவர் தன் வாழ்நாளில் குற்றங்கள் புரிந்தால் அதற்கு உடந்தையாக இருந்தவர் என்று தானமளித்தவர் கருதப்படுவாரா ?***

*இஸ்லாத்தில், பிறர் செய்யும் பாவங்களுக்கு மற்றவர் உடந்தையானவர் என்று கருதும் குற்றச்சாட்டிற்கு இடமில்லை. உறுப்பு இடமாற்றத்திற்கு பிறகு, உறுப்பு தானம் பெற்றவர் தப்பான செயல்களைப் புரிந்தால், உறுப்பு தானம் செய்தவர் பாவி எனக் கருதுவதும் தவறாகும். உறுப்பு தானம் பெற்றவர், புதிதாகப் பெற்ற உறுப்பு சேதமடையும் அளவுக்கு தனக்கு தீங்கு விளைவித்துக்கொண்டாலும் அல்லது பொதுவாக மற்ற எத்தகைய தவறான செயல்களில் ஈடுபட்டாலும், அவருடைய செயலுக்கு அவரே பொறுப்பாவார். இதில், தானமளித்தவர் சம்பந்தப்படமாட்டார். அல்லாஹ் (சு.வ.த.) குர் ஆனில் குறிப்பிட்டுள்ளான் :*

وَلَا تَكْسِبُ كُلُّ نَفْسٍ إِلَّا عَلَيْهَا ۚ وَلَا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ ۚ

*அதாவது, " ஒருவன் தனக்குமட்டுமே பாவத்தைச் சம்பாதித்துக்கொள்ளமுடியும். மற்றொருவனின் சுமையினை ஒருவன் சுமப்பதில்லை" 16*

---

*16 அல்-அன்'அம், 164-ஆவது வசனம்*